# ஹிந்தியால் வரும் கேடு.

## உருது மொழியைக் கவிழ்க்கும்.

## இஸ்லாமிய நாகரிகத்தை அழிக்கும்.

## புரோகித ஆட்சியைப் புதுப்பிக்கும்

### ஆரிய விஷ விருக்ஷத்தை வெட்டி வீழ்த்துவோம்.

கோவை ரஹ்மான் முழக்கம்.

அருமைத் முஸ்லிம் தோழர்களே!

நம் தமிழ் நாட்டில் கோடை விடுமுறைக்குப் பின் அக்ரஹார மந்திரி சபையாரால் 125 பள்ளிக்கூடங்களில் ஹிந்தி மொழி கட்டாயபாடமாக புகுத்தப்படுகின்றது என்பது தாங்கள் அனைவரும் அறிந்த விஷயமே. அதை எதிர்த்து தமிழ் நாடெங்கணும் பலத்த கிளர்ச்சி தமிழர்களால் நிகழ்ந்து வருவதையும் தாங்களறிவீர்கள். சென்னை அரசாங்கத்தார் முஸ்லிம்களாகிய நம்மை இக்கிளர்ச்சியினின்றும் ஒதுக்கி வைக்காவிடில் வந்தேமாதரக்கீதம் பட்டபாடாகி விடுமென்றும் பின்பு தமிழர்களின் கிளர்ச்சி முஸ்லிம்களின் கூட்டுறவினால் பலப்பட்டு விடில் எதிர்கால லக்ஷ்யம் வேறு விதமாக முடியுமென்றும் நினைத்து முஸ்லிம்கள் அக்கிளர்ச்சியில் ஈடுபடாதிருக்கும் வண்ணம் முஸ்லிம்களுக்கு உருதுமொழி போதிக்கப்படுமென்றும், முஸ்லிமல்லாதாருக்குத்தான் ஹிந்தி கற்பிக்கப்படும் எனக்கூறி நம்மைப் பிரித்து வைக்க சூழ்ச்சி செய்துள்ளனர். முஸ்லிம்கள் இச்சூழ்ச்சியில் சிக்குண்டு எவருக்கோ வந்த விபத்தெனக் கருதி வாளாவிருப்பார்களாயின் குதிரை கீழே விழுந்ததுமன்றி, குழியும் பறித்துக் கொண்டதிற்கொப்பாகவே முடியும். இவ்விந்தி மொழியால் தமிழ் மொழி கொலை செய்யப்படுவதையும், குலத்திற்கொரு நீதி வகுக்கும் அதன் நூல்களின் யோக்கியதையையும், பல அறிஞர்களால் பன்முறை விளக்கப்பட்டிருப்பதால் நாம் ஈண்டு அக்கட்டாய ஹிந்தி திட்டத்தால் எமது முஸ்லிம் சமூகத்திற்கேற்படவிருக்கும் இரு பெருந் தீங்குகளை மட்டும் எடுத்துக்காட்டுகின்றோம்.

1. முஸ்லிம் பள்ளி மாணவர்கட்குக் கொடுக்கப்படும் பாட புத்தகங்கள் இஸ்லாமிய ஆச்சாரப்படி எழுதப்பட்டவையல்ல. அன்றி முஸ்லிம் ஆசிரியர்களால் எழுதப்பட்டதாகவோ அன்றி முஸ்லிம் ஆசிரியர் பார்வையிட்டு அங்கீகாரம் பெற்றதாகவோ இல்லை. ஆகவே மேற்படி உருது பாட புத்தகங்கள் புரோகித ஆட்சியைப் புதிப்பிக்கும் நோக்கங் கொண்டு (ஹிந்துக்கள் ஆசாரப்படி) வரையப்பட்டிருக்கும் ஹிந்தி புஸ்தகங்களின் மொழிபெயர்ப்பேயாகும். இதனால் நமது இஸ்லாமிய கலை நாகரிகம் ஒழியும் என்பதை எவர் சொல்லியும் நாம் அறிந்து கொள்ளவேண்டிய அவசியம் இல்லை.

2. முதலில் தமிழ் நாட்டிலுள்ள ஒரு வகுப்பினருக்கு கட்டாயமாக ஊட்டி விட்டு பிறகு இதரர்களை (முஸ்லிம்களை) ஹிந்தியை கற்கும்படி செய்து, உருதுமொழிக்குஉலைவைத்தல்.

**ஆச்சாரியார் அசெம்பிளி பதில்.**

இவ்விரண்டாவது விபத்து மிகப் பெரிது. எதிர் காலத்தில் சங்கடமாக்குவது. சென்ற செவ்வாயில் ஜனாப் கான்பகதூர் கலிபுல்லா சாகிப் கேட்ட கேள்விக்கு கனம் ஆச்சாரியார் அளித்த பதிலாவது:—

முஸ்லிம்கள் என்றைக்கும் ஹிந்தியைப் புறக்கணிக்க முடியாது என்பதாகும். இந்த பதில் நான் மேற் குறிப்பிட்ட விபத்தை ஊர்ஜிதப்படுத்துவதாயிருக்கின்றது. எங்ஙனமெனில் இன்றைக்கு தமிழ்நாட்டில் ஒருவகுப்பாருக்கு (முஸ்லிமல்லாதாருக்கு) ஹிந்தியை வலுக்கட்டாயமாக ஊட்டி விட்டால் நாளைக்கு மாகாண பாஷையாக்குவது சுலபம். அது சமயம் முஸ்லிம்கள் ஹிந்தியை அவசர அவசரமாக தாங்களாகவே கற்க வேண்டி வரும். இன்றேல் மாகாண கவர்ன்மெண்டிலும் அதற்குட்பட்ட சர்வீஸ்களிலும் உத்தியோகம் கிடைக்காது. பிறகு இதே ஆரிய வர்க்கத்தார் நாளடைவில் பொதுபாஷை பிரச்சினையை எழுப்பி தக்க ரெஜாரட்டி கொண்டு நமது இஸ்லாமிய கலை நாகரிகம் நிறைந்த உயரிய உருது மொழியைக் கவிழ்க்க ஏற்பாடு செய்து விடுவார்கள். இதுதான் இவர்களின் லக்ஷியமும். ஆகவே நாம் இப்போதே அவ்விஷ விருக்ஷத்தை முளையிலேயே கிள்ளி எறிந்து விடுவோமாயின் எதிர்காலத்தில் எவ்வித துன்பமும், சஞ்சலமுமின்றி சுகமே வாழலாம். "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்ற முதுமொழிப்படி தக்க சமயத்தில் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கும் ஹிந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியில் முஸ்லிம்களாகிய நாமும் போதிய பங்கு கொண்டு வீரமுடன் வெற்றிக் கொடி நிலை நாட்டுவோமாக! முஸ்லிம்காள் விழுமின்!! ஆரிய விஷ விருக்ஷத்தை விரைவில் வேருடன் கொய்திடுவோம்!

ஒன்றுபடின் வெற்றி நமது என்பது உறுதி.

---

## நன்றியறிதல்

நன்னிலம், மே 26

எங்களது மூத்த குமாரன் திருச்செல்வன் டி. வி. கிருஷ்ணாவின் திருமண அழைப்புக்கிணங்கி விஜயஞ் செய்யவும், ஆசி அனுப்பிடவும், கல்யாணப் பரிசுகள் வழங்கியவருமான உற்றார் உறவினர்களுக்கு தனித்தனியே எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள இயலாததால் இதன் மூலம் எங்கள் மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

டி. கே. விஜயராகவலு நாயுடு

தம்பதிகள்